Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 159 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-609/12-14
வேணு : 19 | ஏப்ரல் 2014 | கானம் : 9



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Nataji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaresan of Raj Thilak Printers (P) Ltd, 1545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor S.Sridhar

# மதுரமுரளி

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை



வேணு : 19 | ஏப்ரல் 2014 | கானம் : 9
Delivered by India Post


















GodIndia Trust





பிப்ரவரி 27, 2014 மஹாசிவராத்திரி
கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான் சன்னிதி
மதுரபுரி ஆஸ்ரம வளாகம்



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 ஏப்ரல் 2014 கானம்: 9

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**


**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-217 | 03 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 09 |
| பாகவத பழம்- ஸ்க3 -ப11 | 10 |
| முன்னேற ஓர் வழி | 13 |
| மதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகள் | 15 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 22 |
| சனாதன புதிர் | 25 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| சத்சங்க செய்திகள் | 28 |
| பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| மாலே மணிவண்ணா | 32 |
| அப்பாலுக்கு அப்பால் | 34 |


**நீ தோல்வி அடைவாய் என்று சொல்பவர்கள் முன்னிலையில், வெற்றிகரமாக வாழ்ந்து காட்டுவதும் ஒரு விதத்தில் பழி தீர்ப்பதுதானே?**

**- எஸ்கீலஸ் - பி.சி. 455 கிரீஸ்- நாடகாசிரியர்**

முன் அட்டை: மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் ஜெயந்தியன்று மார்ச் 16.3.2014
பின் அட்டை: எல்டாம்ஸ் சாலை - தத்வலோகாவில் அருளுரை - பிப்ரவரி 28.2.2014



# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

*ராகம் : அடாணா* *தாளம்: ஜம்பை*

*பல்லவி*

நவ கோள்களின் பலனை தருபவன் நாராயணனே
நவவித பக்தியின் பலனும் நாராயணனே

*சரணங்கள்*

1. **ஈரேழு மந்வந்த்ரங்களும் ஈரிரண்டு யுகங்களும்**
ஆறுபத்து வருடங்களும் அனந்த பத்மநாபனே
இரண்டு அயனங்களும் மூவிரண்டு ருதுக்களும்
ஆறிரண்டு மாதங்களும் அனந்த பத்மநாபனே

2. **மூவொன்பது நக்ஷத்ரங்களும் மூன்றைந்து திதிகளும்**
பதினாறு முஹுர்த்தங்களும் அனந்த பத்மநாபனே
ஈரைந்து திசைகளும் ஏழு ஸ்வரங்களும்
எட்டு வஸுக்களும் அனந்த பத்மநாபனே

3. **ஏழு வாரங்களும் இருபத்தேழு யோகங்களும்**
பதினோரு கரணங்களும் அனந்த பத்மநாபனே
நான்கு வேதங்களும் அதன் அறு அங்கங்களும்
ஆறு தரிசனங்களும் அனந்த பத்மநாபனே

4. **இதிஹாஸ புராணங்களும் அனந்த சாஸ்த்ரங்களும்**
ஸ்ரௌத ஸ்மார்த்த ஸூத்ரங்களும் அனந்த பத்மநாபனே
ஆகம விதிகளும் வ்ரத கல்பங்களும்
பூஜா கல்பங்களும் அனந்த பத்மநாபனே

5. **அத்வைத மதமும் விஸிஷ்டாத்வைத மதமும்**
த்வைத மதமும் அனந்த பத்மநாபனே
நடந்ததும் நடந்து கொண்டிருப்பதும் - நடக்க
இருப்பதும் அந்த நாராயணன் செயலே

MADHURAMURALI

# மதுரமான
# மஹனீயர் - 217

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஒரு உத்தம குருநாதரை ஒரு மனிதன் என்று தரிசிக்கிறானோ, அன்றுதான் அவன் பிறந்ததாக கொள்ள வேண்டும் என்று ஸ்ரீஸ்வாமிஜி அடிக்கடி சொல்வார்கள். அதிசயமாக திரு.குருமூர்த்தி வெங்கடேஷ் தமது பிறந்த நாள் அன்றே, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ப்ரதம தரிசனத்தை பெறும் பாக்கியம் பெற்றார். முதல் தரிசனத்தின்பொழுதே, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நாம உபதேசமும் செய்து, ஒரு துளசி மாலையும் அளித்தார்கள். திரு.வெங்கடேஷின் ஆன்மீக நாட்டத்தில் அவருக்கு இருந்த பல வினாக்களுக்கு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் புன்முறுவலுடன் தெளிவாக விளங்குமாறு பதில் தந்தும், அன்பு பொழிந்தும் வந்தார்கள். அப்படியே ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனத்திற்கு, திரு.வெங்கடேஷ் அடிக்கடி வர ஆரம்பித்தார்.

குருநாதர் அளித்த நாமம் அதன் வேலையினை செய்யாமல் இருக்குமா? உபதேசமான பின், எப்பொழுதும் அவர் நினைவில், ஸ்ரீஸ்வாமிஜி அளித்த மந்திரமானது, தன் முனைப்பின்றி தானாக 24 மணி நேரமும் ஓடிக்கொண்டே இருக்குமாம். அலுவலில் மனம் ஒன்றாமல், இரவும் பகலும் கண்களில் இருந்து ஆனந்த கண்ணீர் வழிந்தோடிக் கொண்டே இருக்குமாம். அப்பொழுது பெங்களூரில் வேலை செய்து கொண்டிருந்த அவர், குருநாதரை பிரிந்து இருக்க முடியாமலும், நாம உபதேசத்தினால் மனம் தனிமையினையும், தியானத்தையும் நாடியது. குருநாதரை இந்த அனுபவங்களுக்கு பின் தரிசிக்க சென்றபொழுது, அவர் "கலக்கமெதற்கு! நானிருக்கிறேன் (**Don't worry, I will take care of you!**)" என அபயம் அளித்தார்கள். இப்படி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவாக்கிலிருந்து வரும் ஒரு சொல்லானது மனதில் கவலையற்ற நிலையையும் அபார ஆறுதலையும் தருமன்றோ? இந்த ஒரு அருட்சொல்லின் பலத்தாலாலேயே, எதையும் ஒருவர் கடந்து விடமுடியும்

அல்லவா? அப்படித்தான் வெங்கடேஷிற்கு இருந்தது. பின், குருநாதர் அருளினால், சென்னையிலேயே வேலை கிடைத்து குருநாதரை தினமும் தரிசிக்கும் பாக்யம் பெற்றார். ஒருமுறை அவருக்கு அலுவலக பளுவினால், நாமம் மனதில் ஓடுவது நின்று விட்டது. குருநாதரிடம் ப்ரார்த்திக்க, அவர் தமது கரங்களால் ப்ரேமிக வரதனது தாம்பூல உச்சிஷ்டம் தந்தாராம். பின், மீண்டும் தடையறாமல் நாம ஜெபம் சொல்ல இயன்றதாம்.

ஒருமுறை ப்ரேமிக பவனத்தில், சிலரை குருநாதர் பேச சொல்லி இருக்கிறார். ஒருவர் பேசுகையில் வெங்கடேஷ் தன் மனதில், "சுமாராகத்தான் பேசுகிறார்" என நினைத்திருக்கிறார். அப்படி நினைத்த இரு நிமிடத்திற்குள்ளாக, ஸ்ரீஸ்வாமிஜி அவரை அழைத்து, "அடுத்து நீ பேசு" என சொல்லிவிட்டார். குருநாதர் முன் பேச வெங்கடேஷ் திணறி போனார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன் பேசுவது எளிதல்ல என உணர்ந்தார். அது ஒரு பாடமாகவும் அவருக்கு அமைந்தது. அதனால், தான் பேசி முடிக்கும் பொழுது, "இங்கு யார் பேசினாலும் சிரமப்படுவர். குருநாதருடைய நிர்பந்தத்தால் பேச வந்தவன் நான். அடுத்து பேச வருபவரும் அப்படித்தான் இருப்பார்" எனக்கூறி முடித்து குருநாதரை நமஸ்காரம் செய்தார். அவரோ சிரித்து கொண்டே, "அடுத்து பேசப்போவது யார் தெரியுமா? நான்தான்!" என சிரித்து கொண்டே சொன்னாராம்!

குருநாதர் ஒரு குடும்பத்தில் ஒருவரை தன்பால் ஈர்த்து விட்டால், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அவரது திருவடி நிழலில் மிகவும் குறுகிய காலத்தில் சரணடைந்து விடுவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இவரது குடும்பத்தினரும் குருநாதரது ப்ரேமைக்கு மீளா அடிமைகளாகி விட்டனர்.

இவரது குடும்பத்தினருக்கு நிகழ்ந்த நாம அனுபவங்களுக்கு கணக்கே இல்லை. சுருங்கச் சொல்லின் தினம், தினம் திருநாள்தான்! இவரது இரண்டாவது அக்காவிற்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் பிரார்த்தித்து கொண்டபடி சொந்தமாக வீடு வாங்க முடிந்தது. அதுவும் அவரது கணவருக்கு, வட்டியே இல்லாத கடன் கிடைத்தது என்பது இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. வெங்கடேஷின் மூத்த அக்கா காப்பு

அதிகாரியாக, ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தவர். ஒரு சமயம் அவரது அலுவலகத்தில் முக்கிய கோப்பு காணாமல் போயிற்று. எங்கு தேடியும் அது கிடைக்கவில்லை. மிகவும் பதட்டமாய் போனது. ஒருநாள் முழுவதும் தேடி மனதினாலும் களைத்து போனார். அவர் அக்காவிற்கு அசிரத்தையாக இருந்தோம் என அனைவரும் சொல்வார்களே என, பயமாகவும் இருந்தது. அன்றிரவும், மறுநாள் காலையும், நாமம் சொல்லியவாறே குருநாதரை பிரார்த்தித்து கொண்டே அலுவலகம் போனார். என்ன மாயம்! நேற்று காணாத அந்த கோப்பு, காலையில் அலமாரியை திறந்தால், இவரை பார்த்து சிரிக்கிறது! குருநாதர் மனது வைத்தால் கிடைக்காதது உண்டோ?

அதுபோல, இவரது தாயாருக்கு, மூளை நரம்பு பாதிப்படைந்து, உடல் நலக்குறைவாக இருந்த போது, குருநாதரது அருளால் மிக விரைவில் குணமடைந்தார்கள்.

திரு.வெங்கடேஷின் கம்பெனியில், அவர் நீண்ட காலம் லண்டன் செல்ல வேண்டும் என ஒரு வேலை வந்தது. சில மாதங்களுக்கு சென்று வருகிறேன் என அவர் சொல்லி பார்த்தார். அதை கம்பெனி ஏற்கவில்லை. வேலைக்கான தகுதிகளில் அவர் தேர்வும் ஆகி இருந்தார். குருநாதரையும் சத்சங்கத்தையும் பிரிய அவருக்கு இஷ்டமே இல்லை. அதனால், நீண்ட காலம் வெளிநாடு போக இஷ்டமே இல்லை அவருக்கு. அழாதகுறையாக குருநாதரிடம் வந்து சொல்லி பிரார்த்தித்தார். அது ஒரு வெள்ளிக்கிழமை; குருநாதரும் "அது சரி. உனக்கு வெளிநாடு நிறைய செல்ல இருக்கிறது. உன் **profile** அப்படி. போய் வா" என்று சொன்னார்கள். வருத்தமுடன் மறுபடி மறுபடி பிரார்த்திக்க ஒரு பழம் கொடுத்து அனுப்பி விட்டார்கள். மறுநாள் சனிக்கிழமை விடுமுறை. குருநாதர் ஒன்றும் பேசவே இல்லை. திங்கட்கிழமை அலுவலகம் வந்தால், அந்த வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து ஒரு மெசேஜ் வந்திருந்தது. வெங்கடேஷ் செய்வதாக இருந்த அந்த வேலைக்கு, தற்பொழுது அவசியமில்லை என்று அதில் இருந்தது. குருநாதர் ஒன்றும் பேசவில்லை. ஆனால் யாருக்கும் பிரச்சினை இல்லாமல், சரி செய்து விட்டார்கள்!

2008இல் பல பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும், சரிவை சந்தித்து, அதிலுள்ளோருக்கு ஒரு பதட்டமான நேரமாய் இருந்தது. வெங்கடேஷின் கம்பெனியும்


MADHURAMURALI

அதில் ஒன்று. அவரிருந்த உயர் பதவியிலும் அத்தகைய பதட்டம் நிலவியது. அப்பொழுது வெங்கடேஷ் இதுவரை செய்திராத ஒரு துறையை சார்ந்த புரொஜக்ட் ஒன்றை, வெளிநாட்டில் அவர் கம்பெனி ஆர்டராக பெற்றது. வெங்கடேஷை அவ்வேலைக்கு தேர்வு செய்தனர். "இந்த வேலையை செய்ய முடியுமா? வேண்டாம் என சொல்லி விடலாமா" என யோசித்தார் அவர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை அவர் அணுகி, தன் மன குழப்பத்தை சொன்னார். ஸ்ரீஸ்வாமிஜியோ, "அவசியம் வெளிநாடு செல்; நல்லது" என்று ஆசி தரவே, வெளிநாடு சென்றார். குருநாதர் ஆசி பெற்று சென்றாரல்லவா? வேலை அவருக்கு தெரியாதெனினும், ஸ்ரீஸ்வாமிஜியின் அருளால், வெங்கடேஷை யாரென்று தெரியாத பலரும், ஆர்டர் தந்த கம்பெனியாருமே கூட உதவி செய்தனர். அந்த வேலையில் அவருக்கு மிக நல்ல பெயரும் கிடைத்தது. தீபாவளிக்காக இந்தியா வந்த அவர், தேனியில் குருநாதரின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி நடந்த கூட்டுபிரார்த்தனையில் கலந்து கொண்டார்.

திரும்பவும் வெளிநாடு செல்கையில், தன் மனைவியையும் குழந்தை கிரீஷையும் கூட்டி செல்ல விரும்பினார். மனைவிக்கு பாஸ்போர்ட் இருந்ததால் குழந்தைக்கு மட்டும் அப்ளை செய்தனர். 15நாளில் வரவேண்டிய அது, ஒரு மாதமாகியும் வரவில்லை. பாஸ்போர்ட் ஏஜெண்டோ, "பாஸ்போர்ட் அலுவலகத்திலே கேளுங்கள். எங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்றார். பாஸ்போர்ட் அலுவலகத்திலோ, 'முறைப்படியே வரும். பொறுங்கள். கொஞ்சம் காலதாமதமாகும்" என்றனர். "இந்த சூழ்நிலையில் என்ன செய்ய முடியும்? மனவருத்தம்தான் மிஞ்சும். இது யாருக்கும் வரும் நிலைமைதான். வெங்கடேஷின் மனைவி மனதால், "குருநாதரை ஏதாவது வழி தாருங்கள்" என பிரார்த்தித்தார். கிளம்ப இருக்கையில், திடீரென ஒரு பெண்மணி அழைத்து மேல்தளத்தில் இருக்கும் ஒரு உயர் அதிகாரியை பார்க்க சொன்னார். மனதில் நாமத்தை சொல்லியவாறே, குருநாதரை பிரார்த்தித்து கொண்டே, புதிய மேலதிகாரியை பார்க்க போனார் வெங்கடேஷின் மனைவி. அந்த அதிகாரி அவர் சொன்னதை கேட்டு விட்டு, "படித்தவர்களான நீங்களே இப்படி அவசரப்படலாமா? சரி. இருப்பினும் கேட்க சொல்கிறேன்" என்று சொல்லி அனுப்பி விட்டார். ஆனால் அப்பொழுது வெங்கடேஷின் மனைவி அந்த அதிகாரியின்



MADHURAMURALI

பெயரை தற்செயலாக பார்த்தார். பார்த்தால், அது நம் குருநாதர் திருநாமமாகவே இருந்தது. சந்தோஷமுடன் உடனே அதை, வெளிநாட்டில் அப்பொழுது இருந்த தன் கணவருக்கு தொலைபேசியில் சொன்னார். அப்புறம் என்ன ஆயிற்று என்கிறீர்களா? மூன்று நாட்களில், குழந்தைக்கான பாஸ்போர்ட் வீட்டுக்கே வந்து விட்டது! இப்படி சில சமயங்களில் தனது அருளை கொஞ்சம் வெளிப்படையாக குருநாதரின் அருட்சக்தி காட்டி கொடுக்கும்.

தன் மகன் கிரிஷை நமது சாந்தீபனி குருகுல பாடசாலையில் வெங்கடேஷ் சேர்த்து உள்ளார். இங்குள்ள ஒவ்வொரு குழந்தை மேலும் குருநாதர் விசேஷ பிரியம் காட்டுவார்கள். அந்த குழந்தைகளும் குருநாதர் என்றால் ஓடி வந்து விடும். அதை பார்ப்பதே ஒரு அழகுதான். மேலும் அக்குழந்தைகளின் படிப்பு, ஆரோக்யம், ஒழுக்கம், அத்யாவசிய தேவைகள் என ஒவ்வொன்றிலும் குருநாதர் பெற்றோருக்கும் மேலான அக்கறை காட்டுவதை பார்க்க முடியும். சமீபத்தில் ஒருநாள் சிறுவன் கிரீஷ் குளிக்கையில், தண்ணீர் பைப்பின் மேல், பலமாக இடித்து கொண்டு அழுதிருக்கிறான். யாரிடமும் சொல்லவில்லை. காலையில் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்த அவனை பார்த்து, குருநாதர் "என்ன அழுதாயோ? ரொம்ப வலித்ததோ? அடிபட்டதா? கவலைப்படாதே. சரியாகி விடும்" என்றாரே பார்க்கலாம்! சிறுவனுக்கே ஆச்சரியம். நாம் ஏதும் சொல்லாமல் அவருக்கு எப்படி தெரிந்தது என்று.

மகனுக்கு மட்டும்தான் இந்த அனுபவமென்றில்லை. அப்பாவிற்குமுண்டு! வெங்கடேஷின் தாய் எப்பொழுதும் நவராத்திரிக்கு நிலக்கடலையில் சுண்டல் செய்வது வழக்கம். ஒருமுறை அதை அவர் செய்யவில்லை. நவராத்திரி முடிந்த பின், வெங்கடேஷின் தந்தை, "என்ன இம்முறை நிலக்கடலை சுண்டல் செய்யவில்லையா?" என்று கேட்டிருக்கிறார். மறுநாள் மதுரபுரி ஆஸ்ரமம் சென்றிருக்கிறார் அவர். ஸ்ரீஸ்வாமிஜி மாலையில் ப்ரேமிகவரதன் சன்னதியில் அமர்ந்து பூஜை செய்தவாறு இருந்திருக்கிறார். நல்ல கூட்டம். கீர்த்தனங்களை பாடி பூஜையில் அவர் செய்த நிவேதனத்தை, ஒரு சிறு பையன் எல்லோருக்கும் பிரசாதமாய் கொடுக்க, பிரசாத பாத்திரத்தை எடுத்தான். திடீரென குருநாதர், அந்த பையனை கூப்பிட்டார்கள். அவன் காதில்

விழும்படி, தூரத்தில் நின்று கொண்டிருந்த வெங்கடேஷின் அப்பாவை கை காண்பித்து ஏதோ சொன்னார்கள். உடனே அந்த சிறுவனும் யாரிடமும் எதையும் பேசாமல், பிரசாதத்தை யாருக்கும் கொடுக்காமல், முதல் பிரசாதமாய் அவருக்கு கொண்டு வந்து கொடுத்தான். வாங்கி பார்த்த வெங்கடேஷின் தந்தை கண்கள் விரிந்தன. ஏனெனில் அது நிலக்கடலை சுண்டல். அவர் அப்படியே குருநாதரை பார்க்க, குருநாதரோ வைத்த கண்ணை வாங்காமல் இரு நிமிடம் அவரையே புன்முறுவலாக பார்த்து இருக்கிறார்!


வெங்கடேஷின் மாமியார் ஒருமுறை, குருநாதரிடம் என் இரண்டாவது மருமகள் கருவுற்றிருக்கிறாள் என சொல்லி ஆசி பெற்றார். மறுநாள் தரிசனத்திற்கு வந்த வெங்கடேஷ் மனைவியிடம் குருநாதர், "நீ இனி அலைய கூடாது. வெயிட் தூக்க கூடாது. வண்டி ஒட்ட கூடாது" என பல கண்டிஷன் போட்டிருக்கிறார். எதற்கு தன்னிடம் சொல்கிறார் என வினவ, குருநாதரோ "நீதான் கருவுற்றிருக்கிறாயே. அதான்" என்றிருக்கிறார். தன் தம்பி மனைவியிடம் சொல்ல வேண்டியதை தன்னிடம் குருநாதர் சொல்கிறார் என நினைத்தார் அவர். அதனால், "ஸ்வாமிஜி! என் தம்பி மனைவிதான் கருவுற்றிருக்கிறாள். நானில்லை" என்றார். "நீ இல்லையா" என திருப்பி திருப்பி கேட்ட குருநாதர், ஒரு பழத்தை தந்திருக்கிறார். ஒரு மாதம் கழித்து வெங்கடேஷ் மனைவி கருவுற்று இரண்டாவது மகன் உத்தவன் பிறந்து, அவனும் குருநாதர் அருளால் சௌக்கியமாக உள்ளான்! குருநாதர் தெரிந்துதான் சொல்லி இருக்கிறார்!

இப்படி, பல மனதிற்கு நெகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளை, சொல்லி கொண்டே போனார் வெங்கடேஷ்! குருநாதர் அருளிருந்தால், தினம் தினம் திருநாள்தான் என்று, அவர் சொல்வது, மிக சரிதானென புரிகிறதுதானே?

**<u>அறிவிப்பு</u>**

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசன விவரம், நிகழ்ச்சிகள் ஆகிய பற்றி தெரிந்து கொள்ளவும், மேலும் தங்களது பிரார்த்தனைகளையும், விண்ணப்பங்களையும் பதிவு செய்யவும் +91-9382393833 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

MADHURAMURALI



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: பிறரிடம் உள்ள சில குறைகள் அதிகம் தெரிவதால், காலப்போக்கில், அவர்களிடம் எனக்கு வெறுப்பு கூட ஏற்பட்டு விடுகிறது. இதை எப்படி சரி செய்து கொள்வது?

பதில்: மனதை நன்கு ஆராய்ந்து உண்மையை நன்கறிந்த, நம் முன்னோர்களும் பெரியவர்களுமான ரிஷிகளும், முனிவர்களும் உலகில் நாம் காண்பவை அனைத்தும், வெகுவாக நம் மனதின் பிரதிபலிப்பே என்று, தீர்மானமாக சொல்லி இருக்கிறார்கள். உலகம் ஒரு கண்ணாடி. நம்மிடம் இருப்பதைத்தானே கண்ணாடி பிரதிபலிக்கிறது?

மேலும் பாகவதம் போன்ற நமது சாத்வீக சாஸ்திரங்க--ளெல்லாம் ஒருவருடைய குறைகளை நாம் அதிகம் சிந்திப்போமானால், அந்த குறையின் விசாரமே நம்மை பாதித்து அந்த குறை நம்மையே தொற்றிக் கொள்ளும் என்கின்றன. ஆக ஒருவரிடம் நமக்கு குறை தெரியும் சமயத்தில், அந்த குறையை ஆராய்வதை விட்டு விட்டு, நம்மிடம் உள்ள குறைகளை ஆராய்வோமானால், ஆன்மீகத்திலும் நாம் முன்னேறலாம். மேலும் பிறரின் குறைகளை ஆராய்வதால் ஏற்படும் வெறுப்பு போன்ற எதிர்மறையான சிந்தனைகளிலிருந்தும் விடுபடலாம்.

கேள்வி: நாம் அனைவரும் இறைவனின் கருவிகள்; உலகில் அனைத்து காரியங்களையும் அவரே செய்கிறார் என்கின்றனர். உலகிற்கு மூல காரணம் அவரே எனும்பொழுது, நான் ஏன் உலகில் கஷ்டப்பட வேண்டும்?

பதில்: "நான்" இருப்பதால்தான்.

கேள்வி: புரியவில்லையே ..

பதில்: உலகில் செயலாற்றுகையில், "எல்லாம் நாம்தான் செய்கிறோம்; நமக்காகத்தான் செய்கிறோம்" என்ற அகந்தை மமதையினாலும், "நான் நான்" என்று எப்பொழுதும் அகங்காரம் தலை தூக்கி, உண்மையில் நாம் இறைவனின் கருவிகள் என்பதை மறந்து விடுவதினாலும்தான், கஷ்டப்படுகிறோம்.



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 3

–ஸ்ரீ ஸ்வாமிஜி (11)



சுகர் மேலும், மனிதர்களுள் விவேகம் உள்ளவர்களால் எது செய்யத் தகுந்ததோ மரணம் அடைய போகிற மனிதர்கள் எதை செய்ய வேண்டுமோ, மேலும், ஹே ராஜன்! தாங்கள் என்னிடம் இது குறித்து கேட்ட கேள்விகள் எல்லாவற்றிற்குமே ஒரே பதில் ஹரிகதையை கேட்கவேண்டும் என்பதுதான். உலகத்தில் ஹரி கதை ஒன்றுதான் கேட்கத் தகுந்தது என்றால் வேதத்தில் கூறப்பட்டுள்ள மற்ற தேவதைகள் உபாசனைகளால் என்னென்ன பலன் கிடைக்கும் என்றும் விஸ்தாரமாக சொல்ல ஆரம்பிக்கின்றார்.

பிரம்மவர்சஸை விரும்பும் ஒருவன் பிரம்மதேவனையும், இந்த்ரிய திறமைகளை விரும்பும் ஒருவன் இந்திரனையும், பிரஜைகளை விரும்புபவன் தக்ஷன் முதலிய பிரஜாபதிகளையும் பூஜை செய்ய வேண்டும். ஸ்ரீ என்னும் ஐச்வர்யத்தை விரும்புபவன் துர்க்கையையும், தேஜஸில் விருப்பம் உடையவன் அக்னியையும், தனத்தை விரும்புபவன் வஸுக்களையும், வீர்யத்தை விரும்புபவர்கள் ருத்ரர்களையும் பூஜை செய்ய வேண்டும். சாப்பாட்டில் விருப்பம் உடையவன் அதிதியையும், ஸ்வர்கத்தை விரும்புபவன் ஆதித்யர்களையும், ராஜ்யத்தை விரும்புபவன் விஸ்-வதேவர்களையும், தேசத்து ஜனங்களை தன் வசத்தில் வைத்திருக்க விரும்புபவன் சாத்யர்களையும் பூஜை செய்ய வேண்டும். நீண்ட ஆயுளை விரும்புபவன் அஸ்வினி குமாரர்களையும், புஷ்டியை விரும்புபவன் பூமியையும், நிலைத்து இருப்பதை விரும்புபவன் மூவுலகங்களையும் பூஜிக்க வேண்டும். நல்ல அழகை விரும்புபவன் கந்தர்வர்களையும், ஸ்த்ரீகளை விரும்புபவன் ஊர்வசி என்ற அப்சரஸையும், எல்லோருக்கும் தலைவனாக இருக்க விரும்புபவன் பரமேஷ்டியையும் பூஜை செய்ய வேண்டும். யசஸை விரும்புபவன் யக்ஞரூபியான விஷ்ணுவையும், பணக்குவியலை விரும்புபவன் வருணனையும்,

வித்யை விரும்புபவன் பரமேஸ்வரனையும், தம்பதிகளுள் அன்யோன்யத்தை விரும்புபவன் உமா தேவியையும் பூஜிக்க வேண்டும். தர்மத்தை விரும்புபவன் உத்தமச்லோகனான விஷ்ணுவையும், சந்ததியை விரும்புபவன் பித்ருக்களையும், ரட்சையை விரும்புபவன் யக்ஷர்களையும், பலத்தை விரும்புபவன் மருத்கணங்களையும் பூஜை செய்ய வேண்டும். ராஜாவாக விரும்புபவன் மன்வந்தர பாலகர்களான தேவர்களையும், சத்ரு நாசத்தை விரும்புபவன் ராட்சஸர்களையும், காமத்தை விரும்புபவன் சோமனையும் பூஜிக்க வேண்டும். ஒன்றிலுமே விருப்பம் இல்லாதவன், பிரக்ருதி சம்பந்தமே இல்லாத புருஷனை பூஜிக்க வேண்டும்.

அகாம: ஸர்வகாமோ வா மோக்ஷகாம உதாரதீ:
தீவ்ரேண பக்தியோகேன யஜேத புருஷம் பரம் 2.2.10

எதுவுமே வேண்டாம் என்பவனும், மேற்கூறிய அனைத்தையும் விரும்புபவனும், அல்லது மிகவும் பரந்த சிந்தனையோடு மோக்ஷத்தை ஒருவன் விரும்பினாலும், இவர்கள் எல்லோருமே மிக தீவிரமான பக்தி யோகத்தால், அந்த பரமபுருஷனான ஸ்ரீமந்நாராயணனையே பூஜிக்க வேண்டும். உண்மையில் மற்ற தேவர்களை பூஜை செய்பவர்களுக்கும் பரம புருஷார்த்த லாபமானது, சிரேயஸானது பக்தர்களின் சேர்க்கையால், பகவான் ஸ்ரீவிஷ்ணுவிடம் திருடமான பக்தியை வளர்த்து கொள்வதிலேயே உள்ளது' என்கிறார் சுகர்.

ஒருவன் ஏதோ ஒரு தெய்வத்தையோ அல்லது தேவதையையோ பூஜை செய்து கொண்டு இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். கணபதி, துர்கை, முருகன், பரமசிவன், இப்படி எந்த தெய்வத்தை பூஜை செய்தாலும் அந்த பூஜை, என்று பலிதமாகும் தெரியுமா? எந்தநாள் நமக்கு ஒரு பாகவதரின், கிருஷ்ண பக்தரின் சங்கம் ஏற்படுகிறதோ, அன்றே நாம் மற்ற தெய்வங்களை பூஜை செய்ததின் பலனை அடைகின்றோம், அப்பொழுதுதான், நமக்கு அந்த அந்த தெய்வத்தின் பூர்ணமான கிருபை ஏற்பட்டிருக்கிறது என்பது நிச்சயம். பின் அந்த பாகவதர்களின் சங்கத்தால், ஒருவன் ஸ்ரீவிஷ்ணுவின் திருட பக்தனாகி, தனது அனைத்து பூஜை பலன்களையும் பெற்றவனாகிறான்.

(கனியும்)



MADHURAMURALI

## *அகில இந்திய சாஸ்திர ஸ்பர்தா (தேர்வு)*

ராஷ்டிரீய சம்ஸ்க்ருத சம்ஸ்தானம், தில்லி நடத்திய அகில இந்திய சாஸ்திர ஸ்பர்தா பிப்ரவரி மாதம் **26,27,28** தேதிகளில் போபால் நகரில், ராஷ்டிரீய சமஸ்தான வளாகத்தில் நடைபெற்றது. நமது சாந்தீபனி குருகுலத்தை சேர்ந்த வித்யார்த்தி ஸ்ரீகார்த்திகேயன் பதஞ்சலி யோக சூத்ரம் குறித்த யோக பாஷண ஸ்பர்தா தேர்வில் (பேச்சுப்போட்டி) மிக சிறப்பாக பேசி, முதலாம் பரிசையும் தங்கப்பதக்கத்தையும் வென்றார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்து கொள்கிறோம்.

மொத்தமாக **350** வித்யார்த்திகள் பங்கு கொண்ட இந்த தேர்வுகளில், யோகசூத்ரம் குறித்த தேர்வுகளில், ஏற்கனவே மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் **14**மாநிலங்களில் இருந்து தலா ஒரு வித்யார்த்தி தேர்வு செய்யப்பட்டு போட்டியில் பங்கு கொண்டு இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பார்க்க - பக்கம் **20**.

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com

# முன்னேற ஓர் வழி

–நல்ல ஹரி

நாம் நல்லவர்களாக மாற வேண்டும். நாம் நல்லவர்களாக எப்பொழுது மாற வேண்டும்? நான் நாளை முதல் முழுவதும் புதிய மனிதனாக மாறி விடுவேன். இப்படித்தான் நினைக்க வேண்டும். நல்லதும் அதுதான். ஆனால் இது நடைமுறைப்படுத்த கூடிய ஒரு விஷயமா? அதை விட இப்படி நாம் முடிவெடுத்தால் பொருத்தமாக இருக்கும். அது நடைமுறைப்படுத்த கூடியதாகவும் இருக்கும். இன்றைய அளவை விட நாளை ஒரு சிறிதளவாவது என்னை உயர்த்தி கொண்டிருப்பேன். நாளையை விட, அடுத்த நாள் இன்னும் சிறிதளவாவது என்னுடைய நிலையை உயர்த்தி கொண்டிருப்பேன். இப்படியாக சிந்தனை செய்து செயல்படுத்தினால் போதுமே?

சரி. எப்படி என்னை முன்னேற்றி கொள்வது? சரியான கேள்வி. நிறைய பேர் எங்களால் காமத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அப்படி இருக்கையில், நாங்கள் எப்படி ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறுவது என்று நினைக்கிறார்கள். பசி, தாகம், தூக்கம், காமம் பொதுவாக எல்லா ஜீவராசிகளுக்குமே பொதுவானது. பசி, தாகம், தூக்கம் மூன்றும் இருந்தால்தான் சரீரம் இயங்கும். காமம் என்பதின் மூலம்தான் உலகத்தில் ஜீவராசிகளின் படைப்பு வந்து கொண்டிருக்கின்றது. அதனால்தான் சாஸ்திரங்களே, தார்மீகமான காமத்தை மனிதனுக்கு விதிக்கின்றது. இவை நான்கும் பிறக்கும்பொழுதே இறைவனால் உன்னிடத்தில் இருக்க செய்தவை.

காமத்தை அடக்கி வெற்றி கொள்ள வேண்டும்தான். ஆனால் அதை விட உன்னுடைய ஆன்மீக வாழ்க்கையை பாழாக்கும் பல விஷயங்கள் இருக்கும்பொழுது, இயற்கையோடு ஒன்றிய காமத்தை பற்றி மட்டும் கவலைப்படுவதுதான் தவறு. பொறாமை, போட்டி, வெறுப்பு, பிறருடைய துன்பத்தில் இன்பம் காணுதல், பொருளாசை, புகழாசை, பிறர் மீது அதிகாரம் செலுத்துதல், எல்லோருடைய கவனத்தையும் தன் பக்கமே ஈர்க்க செய்வது, நன்றி மறப்பது, வீணாக நேரத்தை செலவழிப்பது, ஓயாமல் பேசி கொண்டிருப்பது, மனதின் நிலையில்லா தன்மை,



MADHURAMURALI

எப்பொழுதும் எதையோ பறி கொடுத்தாற் போல சோகமாக இருப்பது, கருமித்தனம், அறிவை வளர்த்து கொள்ளாதது, எல்லாவற்றிற்கும் மேலாக சுயநலம், இத்தனையும் நம்மிடம் இருக்கின்றனவே? அவற்றை பற்றி நாம் கவலைப்படுகின்றோமா? முதலில் மேலே சொன்னவைகள் போன்று நம்மிடம் எவை உள்ளதோ அவைகளில் இருந்து வெளி வருவோம். அதற்கான முயற்சி எடுப்போம்.

எப்படி என்கின்றீர்களா? ஒரு எளிமையான வழி சொல்லி தருகின்றேன்; நடைமுறைப்படுத்தி பாருங்கள். எப்பொழுதும் கவனமாக இருங்கள். யாரிடத்தில் அல்லது எதனிடத்தில் என்கின்றீர்களா? உங்களிடத்தில். ஆமாம். எப்பொழுதும் முழுவதுமாக உங்களை கவனித்து கொண்டே இருங்கள். உங்களை சுற்றி ஒவ்வொரு நிகழ்ச்சியும், மாற்றமும் நடக்கும்பொழுது மனதளவிலும் அறிவு ரீதியிலும் உங்களிடத்தில் எத்தகைய மாற்றங்களை அவைகள் உங்களிடத்தில் ஏற்படுத்தியது என்பதை கூர்ந்து கவனியுங்கள்.

நாம் என்றைக்கோ செய்த தவறுகளுக்கு இன்றைக்கு பாவ மன்னிப்பு கேட்பதுதானே வழக்கம்? அப்படி இருப்பதை விட்டு விட்டு, மனதளவிலும் அறிவு அளவிலும் ஏற்பட்ட மாற்றங்களை கூர்ந்து கவனித்து, அவற்றிலிருந்து பாடம் கற்று கொள்ளுங்கள். அந்த பாடம் இப்படி எல்லாம் இருக்கலாம் என்று ஒரு அனுமானம் தருகின்றேன். மற்றவற்றை நீங்களே சிந்தித்து கொள்ளுங்கள்.

- நாம் இன்னும் நல்ல விதமாக இந்த விஷயத்தை கையாண்டிருக்கலாம்.
- நாம் இப்படி செய்திருக்கவே கூடாது. அல்லது இதைவிட நன்றாக செய்திருக்கலாம்.
- தேவையில்லாத இந்த சம்பவங்கள் என் மன அமைதியை குலைப்பதற்கு இடம் தர மாட்டேன்.
- போதிய அறிவு இல்லாத மனிதனையும், அறிவுள்ள ஒருவன் சமாளித்து விடுவான் என்பதே அறிவின் பெருமை.

இந்த ரீதியில் உங்களை ஒவ்வொரு நிமிடமும் கவனித்து உங்களை தகுந்தாற்போல் மாற்றி கொண்டே வந்தால் போதும். நீங்கள் நினைப்பது போல் தினமும் சிறிதளவாவது நீங்கள் உயர்வீர்கள்.

# மதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகள் -2

இவர், ஸ்ரீக்ருஷ்ணனையே தன் இஷ்ட தெய்வமாக வழிபட்டு வந்து, பல அத்வைத க்ரந்தங்களை இயற்றினார். சன்யாச தர்மத்தையே இவர் மனம் என்றும் நாடியதால் சன்யாசம் பெற ஸ்ரீவீரேஸ்வர சரஸ்வதி என்ற மஹானை அணுகினார். இவர் பக்குவம் அறிய, அந்த மஹான் இவரை பகவத் கீதைக்கு உரை எழுதும்படி பணித்தார். இவரும் அவ்வாறே செய்தார். மிக பிரபலமான கீதையின் தியான ஸ்லோகமான, "பார்த்தாய ப்ரதிபோதிதாம் பகவதா நாராயணேன ஸ்வயம்" - இவர் இயற்றியதுதான் என்பது குறிப்பிட தக்கது. அந்த உரையை கண்ட ஸ்ரீவீரேஸ்வர சரஸ்வதி, இவருக்கு சன்யாச தர்மத்தை உபதேசித்து ஸ்ரீமதுசூதன சரஸ்வதி என்று திருநாமம் சூட்டினார்.

தன் குருவுடன் பல க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்த ஸ்ரீமதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகள், தன் குருவின் ஆக்ஞையின்படி, யமுனை கரையில் ஒரு ஆஸ்ரமம் அமைத்து வசிக்கலானார். ஒருநாள் இவர் முன்பாக ஒரு அதி அத்புதமாக ஆனந்தம் அளிக்கும் ஒரு நீல வண்ண ஜோதி யமுனைக்கரையில் தெரிந்தது. ஸ்ரீ கிருஷ்ணன் இவருக்கு தரிசனம் தந்தான்.

அந்த ஆனந்தத்தை அவர் பாடுகையில்,

த்யானபியாஸ வஷீக்ருதேன மனஸா
தன் நிர்குணம் நிஷ்கிரியம்
ஜ்யோதி: கிஞ்சன யோகினோ யதி பரம்
பஷ்யந்தி பஷ்யந்து தே
அஸ்மாகம் து ததேவ லோசனச்சமத்காராய பூயாத் சிரம்
காளிந்தீ புலிநோதரே கிமபி யன் நீலம் மஹோ தாவதி

என்று கூறுகிறார். அதாவது யோகிகள் வேண்டுமானால், மனதை அடக்கி ஜோதி ரூபமாக ஏதோ ஒரு நிர்குணமான வஸ்துவை காணட்டும். ஆனால் நமக்கோ இந்த யமுனை கரையில் ஓடும் இந்த



MADHURAMURALI

நீலவண்ண ஜோதியே கண்களுக்கு ஆனந்தம் அளித்து கொண்டு என்றும் இருக்கட்டும் என்கின்றார். இப்பேர்ப்பட்ட ப்ரேம பக்தராக திகழ்ந்தார் ஸ்ரீமதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகள்.

இவரின் சமகாலத்தில் வாழ்ந்த ஸ்ரீதுளசிதாசர் இவருக்கு மிக நெருங்கிய நண்பராக இருந்தார். அது மன்னர் அக்பர் ஆண்ட காலம். ஒருமுறை அவரின் மனைவிக்கு தீராத நோய் பற்றி கொள்ள அவள் கனவில் யமுனை தீரத்தில் ஒரு மஹானை கண்டாள்.

விரைந்து யமுனை கரைக்கு வந்த அவள் அங்கு ஸ்ரீமதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகளைக் கண்டாள். அவரிடம் தன் துன்பத்தையும், நோயால் படும் அவஸ்தையையும் எடுத்து உரைத்தாள். ஸ்ரீமதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகளோ எதுவும் மந்திரமோ உபதேசமோ கூட செய்யாமல் அவளை திரும்பி செல்லுமாறு கூறி விட்டார். என்ன ஆச்சரியம்! அவள் ஊர் திரும்பியதும் முற்றும் குணமானாள்! அவரின் தரிசன மாத்திரத்தில் நோய் விலக பெற்றாள். மகான்களின் தரிசனத்தால் அடைய முடியாதது என்ன?

ஸ்ரீமதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகள் அத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபித்தும், அத்வைத கண்டன நூல்களுக்கு பதிலாகவும் பல நூல்களை இயற்றினார். அவற்றில் 'சித்தாந்த பிந்து' என்னும் ஆதிசங்கரின் தசஸ்லோகிக்கு உரை, கீதைக்கு உரையாக பாவார்த்த தீபிகா, அத்வைத சித்தி, ஸங்க்ஷேப ஷாரீரிக வ்யாக்யா, ப்ரஸ்தானபேதம், பக்தி ரஸாயனம் முதலியவை ப்ரசித்தம்.

இவர் பெருமை நாடெங்கும் பரவ, இவருக்கு பல சிஷ்யர்கள் வந்து சேர்ந்தனர். தன் வாழ்நாள் முழுவதையும் அத்வைத சேவையிலும், கிருஷ்ண பக்தியிலும் கழித்தார். 107வருட காலம் வாழ்ந்த இவர் தன் முடிவை முன்னதாகவே அறிந்தவராய், ஹரித்வாரம் சென்று, ஸ்ரீகிருஷ்ணருடன் ஐக்கியம் ஆனார். "க்ருஷ்ணாத் பரம் கிமபி த்வம் அஹம் ந ஜானே" என்றே இருந்த இவர், ஸ்ரீகிருஷ்ணனையே அடைந்ததில் ஆச்சரியம் இல்லை.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gurufinal Consulting Private Ltd**

# வீடு தேடி வருவான் விட்டலன் - 2

## தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

ஸ்ரீரங்கத்திற்குள் நுழைந்தாலே, இங்கேதானே பெரியவாச்-சான்பிள்ளை வ்யாக்யானம் படித்தார், அதற்கு பிராட்டி வ்யாக்யான சக்ரவர்த்தி என பெயர் கொடுத்தாள், இதே பாதுகையின் மேல்தானே வேதாந்த தேசிகர் ஆயிரம் ஸ்லோகங்கள் ஓரிரவில் செய்தார், இங்கேதானே மணவாள மாமுனிகள் காலக்ஷேபம் பண்ணினார் எனும் அந்த பக்தர்களின் சரித்திர ஞாபகம்தான் வரும்.

அதேபோல் சிதம்பரம் நடராஜர் கோயில் எப்படி வந்தது? அதன் தல புராணம் என்ன என்றெல்லாம் கேட்டால், பக்தர்களே பதில் தெரியாமல் விழிப்பார்கள். ஆனால் நந்தனார் என்று சொல்லி பாருங்கள்! அனைவரின் புருவமும் விரியும். தெரியுமே நந்தன்தானே, இந்த நடராஜரிடம் ஏகபக்தி பூண்டு அவரோடு கலந்தவர்தானே என்பர்.

ஆக ஒரு கோவிலின் தல புராணம், மூர்த்தி, யந்திரம், மந்திரம், தீர்த்தம், வ்ருக்ஷம் என எதுவும் ஒருவருக்கும் ஞாபகம் இருப்பதில்லை. அது பற்றி எவரும் கவலைப்படுவதில்லை.

யாரை வைத்து க்ஷேத்திரத்திற்கு பெருமை என்றால், அந்த க்ஷேத்திரத்தில் வாழ்ந்த பக்தர்களை வைத்துத்தான் க்ஷேத்திரத்திற்கே பெருமை.

சிதம்பரம், ஸ்ரீரங்கம் என்ற க்ஷேத்திரங்களில் மட்டுமில்லை; இப்படி அநேக க்ஷேத்திரங்கள் விஷயமும் இப்படித்தான்.

உதாரணத்திற்கு குருவாயூர் கோவிலை நிர்மாணித்தது சாக்ஷாத் தேவகுரு ப்ருஹஸ்பதியும், வாயுபகவானும்தான். அதனால்தான் அதற்கு குரு-வாயு-ஊர் என்றே பெயர். இது வெகு சிலருக்கு தெரியும்.

அந்த கோவில் தீர்த்தமான நாராயண சரஸ் பற்றி ஸ்ரீமத்பாகவதத்திலேயே சொல்லி இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. அந்த குருவாயூரப்பனே பாதாள அஞ்சனம் என்று மிக

அரிய பொருளால் செய்யப்பட்ட மூர்த்தி என்றோ, சாக்ஷாத் உத்தவனே பூஜித்தது என்றோ ஒருவருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

ஆனால் நாராயணீயம், பட்டத்திரி என்று சொன்னால் போதும்; எல்லோருக்கும் குருவாயூர் ஞாபகத்திற்கு வந்து விடும். கோவிலிலேயே குருவாயூரப்பனை சேவிக்க போகையில், இதோ இந்த இடத்தில்தான் அமர்ந்து பட்டத்திரி நாராயணீயம் செய்தார் என்று சொல்வர். ரங்கநாதனோ, நடராஜரோ, குருவாயூரப்பனோ அல்லது வேறு எந்த க்ஷேத்திர ஸ்வாமியாகட்டும் அனைவருக்கும் அந்தந்த க்ஷேத்திர புராணத்தினாலோ, தீர்த்தத்தாலோ பெருமை இல்லை என்பது மட்டுமில்லை; அதை பற்றி ஒருவருக்கும் தெரியாது என்பதுதான் உண்மை. ஆனால் அந்தந்த ஸ்வாமிக்கு பெருமை. அங்கே வாழ்ந்த மாபெரும் பக்தர்களினால்தான் என்றால் அதை யாரால் மறுக்க முடியும்? ஒரு கணம் யோசிப்போம். பெரிய க்ஷேத்திரங்களில் வாழ்ந்த மாபெரும் பக்தர்களை, விரல் விட்டு எண்ணி விடலாம். ஒரு க்ஷேத்திரத்திற்கு ஒருவர், இருவர், மூவர் வேண்டுமானால் ஐந்து பேர் என சொல்லலாம்.

ஆனால் இந்த பாண்டுரங்கனிடம், எந்த ஸ்வாமியும் இந்த விஷயத்தில் போட்டி போட முடியாது. அவனிடம் ஈடுபட்ட மாபெரும் பக்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றால் எண்ணி குழம்ப வேண்டியதுதான். அவ்வளவு மஹாபக்தர்கள்! அதுதான் பண்டரிபுரம். இந்த பெருமை பண்டரி விட்டலனுக்கு மட்டும்தான் உண்டு.

பக்தர்கள் எண்ணிக்கையை லக்ஷத்தில்தான் எண்ண வேண்டும். மஹாபக்தர்களும் அநேகம். இந்த மஹாபக்தர்களை பற்றி தெரிந்து கொள்வதற்கு முன், இப்பேர்ப்பட்ட பாண்டுரங்கன் எப்படி இந்த ஊருக்கு வந்தான் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? பண்டரியில் ஓடும் நதிக்கு பீமா நதி என்று பெயர். ஆனால், பண்டரியில் மட்டும் அதன் பெயர் சந்த்ரபாகா. சந்திரனின் மூன்றாம் பிறை போன்று, அந்த பீமா நதி பண்டரியில் வளைந்து ஓடுவதால், அதற்கு சந்த்ரபாகா என்று பெயர். பக்தர்கள் இந்த நதியை, மிகவும் ஸ்லாகித்து பாடி உள்ளனர்.

(தொடரும்)



MADHURAMURALI

## *ப்ரேமிகவித்யா கேந்திரா - வார்ஷிகோத்ஸவம்*

ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட் சார்பாக, தில்லி குர்காவ்னில் உள்ள ஸ்ரீப்ரேமிக வித்யா கேந்திரத்தில் பிரதி வருடமும் ஸ்ரீப்ரேமிக வித்யா கேந்திராவின் வார்ஷிகோத்ஸவமானது, ஹோலி பண்டிகைக்கு பத்து நாட்கள் முன்பாக பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களின் அனுக்ரஹ பாஷணத்துடன் நடைபெற்று வருகின்றது. இவ்வருடம் மார்ச் **4,5,6** தேதிகளில் நான்காவது வார்ஷிகோத்ஸவமானது கொண்டாடப்பட்டது. இதில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் திருக்கரங்களால், ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் திவ்யகிரந்தமான, ஸ்ரீகிருஷ்ண பக்தி ரஸோதயம் என்பதன் இந்தி மொழிபெயர்ப்பு, வெளியிடப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள், காலையில் ஸ்ரீகிருஷ்ண பக்தி ரஸோதயத்திலும் மாலை கிருஷ்ண ஜனனம் முதல் ப்ருந்தாவன லீலைகள் வரையிலுமாகவும் இருவேளைகளிலும் உபன்யாசம் செய்தார்கள். தினமும் காலை ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் திவ்ய கிரந்தங்கள், பாராயணம் செய்யப்பட்டது.

## *ஹோலி பண்டிகை*

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மஹாப்ரபுவின் ஜெயந்தியை முன்னிட்டு மார்ச்**16** அன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில், காலை **6**மணி முதல் மாலை **6**வரை அகண்டமாக, மத்தள, வீணா, வேணு, ம்ருதங்க வாத்யத்துடன் பாடும்போது கண்ணன் மகிழ்கின்றான் என்பதற்கேற்ப, ஹரே ராம மஹாமந்திர நாமகீர்த்தனம், பக்க வாத்யங்களுடன், மிக இனிமையாக, பிரபல பாகவதர்கள் பலராகங்களில் பாட, திரளானோர் வாங்கிப் பாடப்பெற்றது. மாலையில் மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதன் புறப்பாடு கண்டருளினார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொள்ள, கன்யாகுமரி ஸ்ரீஜயஹனுமான் சன்னதியில் அற்புதமான கீர்த்தனங்களை பாடியபடி, கோலாஹலமாக ஹோலி பண்டிகை மிக அழகாக கொண்டாடப்பட்டது. குழந்தைகள் வர்ணபொடிகளை ஒருவர் மேல் ஒருவர் தூவி கொண்டாடினர். அனைவருக்கும் விமரிசையான பிரசாதமும் மதுரபுரி ஆஸ்ரமத்தில் வழங்கப்பட்டது.

## சனாதனப்புதிர் பகுதி 60 - கேள்விகள் - ஆத்ரேயன்

**1.** விதஸ்தா ஒரு நதி. இதை பற்றிய குறிப்பு எங்கு காணப்படுகிறது? இப்பொழுது எப்படி அழைக்கப்படுகிறது?

**2.** வாமதேவர் ப்ரணவத்தை பற்றிய விவரங்களை யாரிடமிருந்து கற்றார்? இவரை பற்றிய விபரங்கள் எங்கு காணப்படுகிறது?

**3.** ருத்ர யாமம்-இது எத்தனை ஸ்லோகங்களை கொண்டது?

**4.** ரதத்தில் மூலவர் புறப்படும் க்ஷேத்திரம் எது?

**5.** சனாதன தர்மம் என்ற வார்த்தைகள் எந்த புராணங்களில் காணப்படுகின்றன?

**6.** சர்வ மூலம் என்று எதை சொல்லுகிறார்கள்?

**7.** சிபி சக்கரவர்த்தி- காசி ராஜா- இவரது புறா பருந்து கதை மஹாபாரதத்தில் எங்கு காணப்படுகிறது?

**8.** இராவணனை குரங்குகளால் அழிவாய் என்று சாபமிட்டவர் யார்?

**9.** பரகாயப்ரவேசம் எந்த நூலில் காணப்படுகிறது?

**10.** காத்யாயனி விரதம் -இதை பற்றிய குறிப்பு எந்த நூலில் காணப்படுகிறது?

### விடைகள்

**1.** ரிக்வேதம் - நதிஸ்துதி **10.75.1.9;** ஜீலம் என்று அழைக்கிறார்கள்.

**2.** ஷண்முக ஸ்வாமியிடமிருந்து; ஐத்ரேய உபநிஷத் **2.1.5** தாயின் கர்ப்பத்திலேயே ப்ரம்மத்தை தெரிந்து கொண்டார். ப்ரஹதாரண்ய உபநிஷத் **1.4.10** ப்ரம்ம ஞானி என்று சொல்கிறது.

**3.** தாந்த்ரீக வழிபாட்டு முறை **66** அத்யாயங்கள் **6000** ஸ்லோகங்கள் கொண்டது.

**4.** பூரி ஜகன்னாத் - இவர் குண்டிசாபாடி கிராமத்தில் இருக்கும் கோவிலில் க்ருஷ்ணர், பலராமர், சுபத்ரைக்கு சிலைகள் கிடையாது.

**5.** மத்ஸ்ய புராணம் **143.30.32;** பாகவதம் **7.11.2;** ப்ரஹ்மாண்ட புராணம் **2-33,37-38;**

**6.** ஸ்ரீமத்வாசாரியர் எழுதிய **37**கிரந்தங்கள் சர்வ மூலம் என்று அழைக்கப்படுகிறது.

**7.** வனபர்வா **197;** இந்திரன் பருந்தாகவும் அக்னி புறாவாகவும் வந்தார்கள்.

**8.** நந்திகேஸ்வரர்; ராமாயண உத்திர காண்டம் **16.**

**9.** பதஞ்சலி யோகசூத்ரம் - **3.38;** ஆதிசங்கரர் அமருக ராஜனின் உடலில் புகுந்தார்.

**10.** ஸ்ரீமத் பாகவதம் **10.22.1-5** தசம ஸ்கந்தம்.

## பாலகர்களுக்கு ஒரு கதை



# கொடுக்கலும் வாங்கலும்

முத்து ஒரு கோதுமை வியாபாரி .அவன் தின்பண்ட கடைகளுக்கு கோதுமை கொடுத்து வந்தான் .அவன் கோதுமையை ஒவ்வொரு கிலோ பாக்கெட்டாக போட்டு கொடுத்து விடுவான் . ஒருமுறை, அவன் பெண் லக்ஷ்மிக்கு நிச்சயதார்த்தம் வந்தது. அதற்கு வரும் விருந்தாளிகளுக்கு அவன் கோதுமை அல்வா போடுவதென தீர்மானித்தான்.

உடனே மிகவும் ருசியாக இனிப்பு செய்யும் லாலா அல்வா கடைக்கு சென்று அதன் முதலாளியிடம், " மாதவா! நாளையே எனக்கு தரமான ஒரு கிலோ அல்வா வேண்டும். என் பெண் லக்ஷ்மிக்கு நிச்சயதார்த்தம்" என்றான். மாதவனும் சந்தோஷமாக ஒப்புகொண்டான்.

நிச்சயதார்த்த நாளன்று முத்து பரபரப்பாய் இருந்தான். விருந்தாளிகளை விழுந்து விழுந்து கவனித்தான். அல்வா சொன்னபடி வாங்கி வந்து, விருந்தில் பரிமாறினான். எதிர்பார்த்தபடி அல்வா மிக ருசியாக இருந்தது. ஆனால் முத்துவின் மனைவி பரிமாறுகையிலே, "குறைத்து வாங்கி விட்டீர்களோ" என்று கேட்டாள். முத்துவுக்கு அதை கேட்டு சுருக்கென்றது. அப்படி எல்லாம் இல்லை. ஒரு கிலோ வாங்கி இருக்கிறேன் என்றான். பரிமாறியதில் ஐந்து பேருக்கு அல்வா போட முடியாமல் குறைந்து; .முத்துவிற்கு சங்கடமாய் இருந்தது. நெளிந்தான். .விருந்தாளிகள் முணுமுணுத்தார்கள். முத்துவின் மனைவியின் முகம் அதை கேட்டு சிவந்து போனது. அவன் பெண் லக்ஷ்மியை பார்த்தால் அழாத குறையாக இருந்தாள். முத்துவின் கணக்கு தப்பானதே இல்லை. சரியாக எத்தனை பேர் வருவார்கள் என்று கணக்கு போட்டுத்தான் ஒரு கிலோ அல்வாவிற்கு சொல்லி இருந்தான் .அவன் எதிர்பார்த்த அளவே விருந்தினர்களும் வந்திருந்தனர்.

கணக்கு தப்ப வாய்ப்பே இல்லை; .ஐந்து பேருக்கு

குறைகிறதென்றால், அந்த அளவிற்கு அல்வாவின் அளவு குறைந்து இருக்கிறது என அவனுக்கு புரிந்தது. மாதவன் குறைவாக கொடுத்து இருக்கிறான் என்று அவன் நன்றாக புரிந்து கொண்டான். அடங்கா கோபத்துடன் கடைக்கு ஓடி போய், "ஒரு கிலோ கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டு குறைத்து கொடுத்திருக்கிறாய்; ஏமாற்றுக்காரன் நீ. என் பெண் வாழ்வே கெட்டிருக்கும்" என்று கூச்சல் போட்டான்..

மாதவனோ உறுதியாக, "ஏ முத்து! அப்படி சொல்லாதே. உனக்கு என்ன ஆயிற்று? அறிவில்லாதவன் போல பேசுகிறாய். இன்று உனக்கு அல்வாவை எடை போட்டு கொடுக்கையில் எடைகல் எங்கு வைத்தேனென்று மறந்து விட்டேன். என்ன செய்தேன் தெரியுமா? நீ கொடுத்த ஒரு கிலோ கோதுமை பாக்கெட்டைத்தான் எடைக்கல்லாகவே வைத்தேன். நிச்சயமாக குறைய வாய்ப்பில்லை. சும்மா எதையாவது பேசி கோபத்தை கிளறாதே" என தெளிவாக சொன்னான்.

முத்துவிற்கு அதை கேட்டவுடன் முகம் வெளிறி போனது. வியர்வைத்துளிகள் அரும்பின. உடனே, தலையை தொங்க போட்டு கொண்டு பேசிய பணத்தை கொடுத்தவாறு நடந்தான் முத்து. சற்று முன் சப்தம் போட்ட முத்து, அமைதி ஆகி விட்டானே என்று ஆச்சரியம் அடைந்தான் மாதவன். .

கோதுமையின் எடையைக் குறைத்தே லாபம் கண்டு வந்திருந்தான் முத்து. இன்றோ அதனால் எடை காண முடியாத பெரும் பாரத்தினால், தளர்ந்து நடந்து வீட்டை அடைந்தான். கேள்விக்குறியோடு நின்று கொண்டிருந்த மனைவி மற்றும் மகளை பார்த்து அவன் என்னதான் சொல்வான்?

### சத்சங்க செய்திகள்

**மார்ச் 14 - 20** வரை - GOD INDIA TRUST சார்பாக பூர்ணிமாஜி ஸ்ரீபெரும்புதூர் வன்னியர் சத்திரத்தில், பகவத்கீதையில் 12வது அத்யாயம் - பக்தியோகம் குறித்து உபன்யாசம் செய்தார்.

**மார்ச் 13 - 20** வரை - நாராயணீய சங்கீர்த்தனா டிரஸ்ட் சார்பாக ஸ்ரீசாந்தீபனி குருகுல பிரின்சிபால் ஸ்ரீபாலாஜி, மும்பை செட்டா நகர் ஸ்ரீசுப்ரமண்ய சமாஜத்தில் ஸ்ரீமத்பாகவத உபன்யாசம் செய்தார்.

**பிப்ரவரி 27** மஹாசிவராத்திரியை முன்னிட்டு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்பாக கன்யாகுமரி ஸ்ரீஜயஹனுமானுக்கு விசேஷ திருமஞ்சனமும் வடைமாலையும் சாற்றப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வேதகோஷத்துடன், நான்குகால பூஜை செய்து பிரசாதம் வழங்கி அருளினார்கள். விட்டலாபுரத்தில் ஸ்ரீபாண்டுரங்கனுக்கும் விசேஷ திருமஞ்சனம் செய்யப்பட்டது.

**பிப்ரவரி 28** சென்னை எல்டாம்ஸ் சாலை சிருங்கேரி மடத்தின் தத்வலோகா அரங்கத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஜீவன் முக்தர்களின் பெருமை குறித்து அருளுரை வழங்கினார்கள்.

**மார்ச் 1** முதல் **மார்ச் 7** வரை திருப்பூர் கொங்குவேளாளர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் நிகழ்த்தினார்கள். தினமும் பெருந்திரளான அன்பர்கள் வந்து கலந்து கொண்டு ஆனந்தித்தனர். 3ஆம் தேதி மற்றும் 6ஆம் தேதி அன்று அதே பள்ளியிலும் நாச்சியம்மை வித்யா வாணி பள்ளியிலும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையையும் ஸ்ரீஸ்வாமிஜி நிகழ்த்தினார்கள்.

**மார்ச் 15 - Pearland, TX**இல் அமெரிக்கா ஹூஸ்டன் நாமத்வாரின் நான்காம் ஆண்டு விழா சைதன்ய மஹாப்ரபு ஜெயந்தியை ஒட்டி கோலாஹலமாக கொண்டாடப்பட்டது. "ராதே ராதே" என்ற தலைப்பில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ராதா தேவி மற்றும் கோபிகளின் பக்தியை காட்டும் அழகான கீர்த்தனங்கள் தேர்ந்த கலைஞர்களால் நடனத்துடன் பாடப்பெற்றது. மிருதங்கம், கீபோர்ட், வயலின், வீணா வாத்தியங்கள் இனிமையாக ஒலிக்க, கேட்டொரெல்லாம் இசையிலும் கீர்த்தனத்திலும் மூழ்கி ஆனந்தித்தனர். விழா ஆரம்பத்தில் முன்பதிவு செய்யப்பட்ட ஸ்ரீஸ்வாமிஜியின் சிறப்பு வீடியோ அருளுரை வந்திருந்த அன்பர்களுக்காக காண்பிக்கப் பெற்றது. இப்பெருவிழாவில் சிறப்பு விருந்தினர்களாக Mayor Tom Reid of Pearland city, Mayor Delores Martin of Manvel city, Ms. Kim Sinistore, Executive Director of Pearland Convention and Visitor's Bureau, Ms. Naomi Stevens, President of Pearland Arts League, Smt. Thara Narasimhan, secretary of Hindus of Greater Houston & பிரபல நாட்டியாசிரியர்கள் ஸ்ரீமதி.பத்மினிசாரி, ஸ்ரீமதி.இந்திராணி பார்த்தசாரதி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு 400க்கும் மேற்பட்டோர் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



MADHURAMURALI

## Dr. Shriraam Mahadevan

**MD (Int Med), DM (Endocrinology)**
**Consultant in Endocrinology and Diabetes**
**Regn. No 62256**

## ENDOCRINE & SPECIALITY CLINIC

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**
**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**
**(Next to Krishnamachari Yogamandiram)**
**Tel: 2495 0090Mob: 94458 80090**
**E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com**
**www.chennaiendocrine.com**




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி



## ஸ்ரீபக்த கோகில்ஜி -4

குருதேவரின் ஆணையின் பேரில் கோகில்ஜி வால்மீகி ஆஸ்ரமத்தில் தங்கி, ஸஹசரி ரூபத்தில் ஜனகநந்தினியான ஸீதைக்கு மானஸீ ஸேவா புரிந்து வந்தார். ஸீதையின் விரஹ வேதனையை பார்த்து பார்த்து அவருக்கு புதிய ஒரு பாவம் உதயமாயிற்று.

ஸீதையின் வேதனையை குறைப்பதற்கு, அவர் ஸீதையின் ஸந்தேஷத்தை ராமரிடமும், ராமரின் ஸந்தேஷத்தை ஸீதையிடமும் எடுத்து செல்வது என்று ஸங்கல்பித்தார்.

அப்பொழுது அவரது பாவமயமான தேஹம் ஒரு குயிலின்(கோகிலத்தின்) ரூபத்தை எடுத்து கொண்டது. குயில் ரூபத்தில் சில ஸமயம் அயோத்யா சென்று ஸ்ரீராமரிடம் ஜனகநந்தினியின் ப்ரேமை, விரஹ விலாபம் மற்றும் ராமரிடம் அவளுக்கிருக்கும் மங்களமான எதிர்ப்பார்ப்புகளையெல்லாம் வர்ணிப்பார். மீண்டும் வால்மீகி ஆஸ்ரமத்தில் ஸீதையிடம் ஸ்ரீராமரின் ஸந்தேஷத்தை கூறுவார்.

சில நேரங்களில் ஸீதையின் துக்கத்தில் மூழ்கி ஸ்ரீராமரிடம் பின் வருமாறு கூறுவார் - "ஹே கௌஸல்ய நந்தன! தங்கள் ஹ்ருதயமோ மிகவும் ம்ருதுவானது. அப்படியிருந்தும் நிரபராதியான பதிவ்ரதா ஷிரோமணியை காட்டில் தனியாக விட்டு விட்டு, வரச்சொன்ன தங்கள் ஹ்ருதயத்தில் வலி ஏற்படவில்லையா? அவள் தங்கள் மீதுள்ள ப்ரேமையால் ஸம்ஸார சுகங்களையெல்லாம் உதறி தள்ளிவிட்டு, தங்களுடன் வனத்தில் சுற்றினாள். பெரும் கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டாள். வனத்தில் நடந்து நடந்து அவள் மிகவும் சோர்வடைவாள்; ம்ருதுவான சரணங்களில் முள் குத்தும்; பசி மற்றும் தாகத்தினால் முகமே வாடிவிடும்; இருந்த போதிலும் அவள் தங்களை பார்த்து புன்முறுவல் செய்வாள்.

தங்களுக்கு அவளது கஷ்டம் தெரிந்து விடப் போகிறதேயென்ற எண்ணத்தினாலே அவள் இவ்வாறு செய்வாள். தங்களை ஸந்தோஷமாகக் காண வேண்டும் என்பதற்காக, அவள் தன்னுடைய ஸர்வஸ்வத்தையும் த்யாகம் செய்தாள். ஆனால் தாங்கள் அவளுக்காக தங்களுடைய கீர்த்தியை கூட விட்டுகொடுக்க முன் வரவில்லை. உங்களை எவரோ இகழ்வதை கேட்டு, அவளை த்யாகம் செய்துவிட்டீர்களே!

ஹே மஹராஜ்! தண்டகாரண்யத்தில், அவளது விரஹத்தில் 'ஹா ஸீதே! ஹா ஜானகி!' என்று எப்படி துடித்தீர்கள். அதெல்லாம் வெறும் நாடகமா?

ராஜாதிராஜனே! வனத்திலிருந்து திரும்பியதும் ராஜ ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்த, அந்த நாளின் சம்பவம் உமக்கு மறந்துவிட்டதா? அப்பொழுது தாங்கள் ஸீதையிடம் 'ப்ரியே! இந்த போக்யமான செயற்கையான அரண்மனை வாழ்வை விட, எனக்கு நாம் சித்ரகூடத்தில் இருந்த அந்த நாட்களே மிகவும் ப்ரியமானதாக இருந்தது. அங்கு நாம் க்ஷண நேரமும் பிரியாமலேயே இருந்தோமல்லவா? தினமும் புதிய புதிய வண்ணமயமான புஷ்ப ஊஞ்சலில் எப்படி ஸ்வதந்த்ரமாக நாம் ஆடுவோம்?' என்று கூறி, 'மேலும் ப்ரியே! இம்மூவுலகிலும் நீயில்லாத ஒரு இடத்தை நான் அறியேன்' என்று கூறிய ப்ரிய வசனங்களெல்லாம் வெறும் வெளி வேஷம்தானா?

ஆனால் ஸீதையின் ப்ரேமையே சற்றும் குறையாமலேயே உள்ளது. இன்றும் இந்நாட்டிலிருந்து செல்லும் பக்ஷியிடம், அவள், தங்கள் நலனை விசாரிக்கிறாள். இந்த தேசத்து காற்று தன்மேல் பட்டாலும், ரோமாஞ்சிதம் அடைகிறாள். இங்கிருந்து செல்லும் மேகங்களை பார்த்து கண்ணீர் சிந்துகிறாள். இன்றும், தாங்கள் என்றாவது தொட்டிருந்த ஒரு வஸ்திரத்தையே, உடுத்திக் கொள்கிறாள். நீங்கள் பேசிய ப்ரிய வசனங்கள் சிலவற்றையே, மீண்டும் மீண்டும் முணுமுணுக்கிறாள். உங்களுக்குள் நடந்த சில ப்ரணய லீலைகளையே, மீண்டும் மீண்டும் சிந்தித்து கண்ணீர் சிந்துகிறாள்.

அவர், மேலும் பலவிதத்தில், சீதைக்காக ராமரிடம் பரிந்து பேசுவார்.

(தொடரும்)

MADHURAMURALI

# *மாலே மணிவண்ணா - 126*

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்




மலைமேல் எழுந்தருளியுள்ள திருமாலையும் பலதேவனையும் வேண்டி பாடலை நிறைவு செய்கிறார்.

கள்ளணி பசுந்துளவினவை கருங்குன் றனையவை
ஒள்ளொளியவை ஒருகுழையவை
புள்ளணி பொலங் கொடியவை
வள்ளணி வளை நாஞ்சிலவை
சலம்புரி தண்டேந்தினவை
வலம்புரி வய நேமியவை
வரிசிலை வய அம்பினவை
புகர் இணர் சூழ் வட்டத்தவை புகர்வாளவை
என்பதுவரை இருவரையும் வாழ்த்தும் பகுதியாகும்.

தேன் சிந்தும்படியான பசிய துளவ மாலையை உடையாய், கரிய மலையொத்த தோற்றத்தை உடையாய், மிக்க பிரகாசத்தை உடையாய், ஒருகாதின்கண் குழை அணிதலை உடையாய், கருடப் பறவையால் அழகுபெற்ற பொன்மயமான கொடியை உடையாய், கூர்மையால் அழகுபெற்ற வளைந்த கலப்பையை உடையாய், மாற்றார்க்குத் தீமை செய்கின்ற தண்டினை ஏந்தி உள்ளாய், வலம்புரியாகிய பாஞ்சசன்யம் என்ற சங்கினையும், வலிமை உடைய சக்கரப் படையினையும் உடையாய், கட்டமைந்த வில்லையும் வெற்றி விளைவிக்கும் அம்பினையும் உடையாய், செந்நிறப் புள்ளி ஒழுங்கு சூழ்ந்த பாராவளை என்னும் சுழல் படையை உடையாய், செந்நிறம் உடைய வாளினை உடையாய், என இவ்வாறு வாசுதேவனாய திருமாலையும் பலதேவனையும் தோத்திரம் செய்தார்.

இதில், ஒள்ளொளியவை என்பது வெண்மையான பிரகாசத்தை உடையவன் என்று பலதேவனைக் குறித்தது - காதொரு குழையோன் பலதேவன் என்பது முன்னும் கூறப்பெற்றது. வளைந்த கலப்பையை உடையான் பலதேவனே; வலம்புரிச் சங்கும், தண்டும் ஏந்தினவன்

MADHURAMURALI

என்பதும் பலதேவனைக் குறிப்பதே ஆகும். ஏனைய வாசுதேவனைக் குறிப்பனவாகும். திருமாலின் தண்டு, தனு, வாள், பணிலம், நேமி என்னும் பஞ்சாயுதங்களும் இதன்கண் கூறப்பெற்றுள்ளன. (திருமாலின் தண்டு கௌமோதகி, தனு சார்ங்கம், வாள் நந்தகி, சங்கு பாஞ்ச சன்னியம், நேமி சுதர்சனம் என இவற்றை அறிக) என்றிவ்வாறு தோத்திரம் செய்து நிறைவாகத் தன்னுடைய வேண்டுகோளை வைக்கிறார். எனவாங்கு,

நலம்புரி அம்சீர் நாம வாய்மொழி
இதுவென உரைத்த எனம் உள்ளமர்ந்து இசைத்து இறை
இருங்குன்றத்து அடியுறை இயைகெனப்
பெரும் பெயர் இருவரைப் பரவுதும் தொழுதே 65

அழகிய புகழையும் பெருமையையும் உடைய வேதம் தனக்கு நன்மையை விரும்பி, அப்பெருமானது பெருமை இது என்று சொல்லுதலால் நாங்களும் உள்ளம் விரும்பி அச்சொற்களுள் அறிந்தவற்றைக் கூட்டி உரைத்து, பெரும்புகழை உடைய இருவரையும் வணங்கி, திருமாலிருஞ்சோலை மலை என்னும் இந்த இருங்குன்றத்தின் கீழ்த் தங்குதல் எங்களுக்கு என்றும் கிடைப்பதாக வேண்டிப் பரவுகின்றோம் என்று முடிக்கிறார். நலம்புரி என்பது நன்மையை விரும்பி எனப் பொருள் பெற்று, வேதம் பயில்வார்க்கு நன்மையை விரும்பி அப்பெருமானது புகழை இது என்று காட்டி உரைக்கிறது எனப் பொருளாகும்.

நாம வாய்மொழி பெருமை உடைய வேதம், எழுதாக் கிளவி ஆதலின் வாய்மொழி எனப்பெற்றது. நாம என்பது அச்சம்தரும் என்றும் பொருள்பெறும் 'உள் அமர்ந்து இசைத்து' மனம் விரும்பி சிலவற்றைக் கூட்டி உரைத்து எனப் பொருள் பெறும். இவ்வாறு மலையைத் தரிசித்து இருவரையும் வாழ்த்தி வணங்குதலால் பெறும் பயன், இம்மலை அடியிலேயே வாழ்கின்ற வாழ்க்கை என்றும் பெறவேண்டும் என்பதே ஆகும். மலையே உபாயமும், அதனால் அடையப்பெறும் பயனாகிய உபேயமும் ஆக இருக்கிறது என்ற ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் இதனால் உணர்த்தப் பெறுகிறது. பகவத் கீதையில் கண்ணன் நானே வழியும் பயனுமாய் இருக்கிறேன் என்றதும் காண்க. ஆறாம் பாடல் நிறைவுற்றது. (தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



## அக்கா மஹாதேவி -4

’மனிதனுக்கு ஒரு கவலை என்றால் விலங்கிற்கு வேறு ஒரு கவலை உண்டு; நல்லவனுக்கும் தீயவனுக்கும் வெவ்வெறு கவலைகள்; எனக்கும் ஒரு கவலை உண்டு. அது போல் உன்னை ஆசை எனும் கவலை வாட்டுகிறது. நீயும் உனது ஆடைகளும் எனக்கு பாரமே! உன்னுடன் இருப்பதென்பது எனக்கு இயலாது" என்று மன்னனுக்கு பதிலளித்து கிளம்பிய மஹாதேவி முன் வந்த குரு, ஆடை ஒன்றை அளித்து, "நான் அனைத்தையும் துறந்தவள் என்பதும் உனக்கு ஒரு தடை ஆக இருக்க வேண்டாம், மகளே! நான் சொல்வதை கேள். இது உன் பொருட்டு அல்ல. நீ அனைத்தும் கடந்தவளே. பிறர் பொருட்டு இதை அணிந்து கொள்" என்றார். மஹாதேவியாரும் அவ்வொற்றை ஆடையை அணிந்து, அல்லமப்ரபுவை தரிசிக்க எண்ணி கல்யாண் நகரை நோக்கி கிளம்பினார்.

வழியில் பல தலங்களை அவர் தரிசித்தவாறே வந்தார். அக்காலத்தில் இப்படி கிளம்பியது பெரும் புரட்சி என்பதால், அவரை பற்றி எல்லா இடத்திலும் விரைவாக செய்தி பரவியது. மஹாதேவியாரை தேடி வந்து மன்னன் மன்னிப்பு கேட்டான். அவனுக்கு பல நல்ல உபதேசங்களை சொல்லி திருப்பி அனுப்பினார் மஹாதேவி.

"நிழலில்லாத மரமும், இரக்கமற்ற மனிதனிடம் செல்வமும், பாலில்லாத பசுவும், அருளில்லாத அழகும், மூளை இல்லாதவனிடத்தில் ஆயுதமும் பயனற்றவை போல், சிவபிரானை அறியாமல் இருக்கும் ஜீவனது வாழ்க்கை வீணானது ஆகும்".

"பூமிக்குள் புதையல் போலும், பழத்துக்குள் சுவை போலும், எள்ளுள் எண்ணெய் போலும், மரத்துள் அக்னி போலும், மல்லிகார்ஜுனரே எங்கும் இருக்கிறார். அவரை யாரும் அறிவதில்லை".

"என்னை நான் அறிவதற்கு முன்பே கூட, தங்கத்துடன் அதன் நிறம் சேர்ந்தே இருப்பது போல், என்னுடன்தான் மல்லிகார்ஜுனர் இருந்தார். ஆனால் நான்தான் அவரை

அறியவில்லை அப்பொழுது. அவரது மாயையானது தேஹத்தை நிழலாலும், மூச்சை மனதாலும், மனதை நினைவாலும், நினைவுகளை அறிவாலும், அறிவை மறதியாலும் ஆள்கிறது. அவரருளின்றி அவரது மாயையை யாரால் வெல்ல முடியும்?"

"மூச்சே மணக்கிறது என்றால் பூக்கள் எதற்கு? பொறுமையும் அமைதியும் எப்பொழுதும் இருக்குமென்றால், சமாதி எதற்கு? மல்லிகார்ஜுனரே உலகமாய் மாறி இருப்பதை கண்டு கொண்டேன். எனக்கு ஏகாந்தம் எதற்கு?"

"சுவையான உணவை விட்டாலும் நாக்கிற்கு சுவை வித்தியாசம் தெரியாமலிருக்கிறதா என்ன? பெண்டிரை துறப்பதில் என்ன இருக்கிறது? காமம் அல்லவா விட வேண்டும்? திகம்பரனாய் இருப்பதில் என்ன இருக்கிறது? மனதல்லவோ அழிந்திருக்க வேண்டும்? என் மனதழிந்து விட்டது. பழத்தை சாப்பிட்டாயிற்று என்றால் மரம் வளர்த்தவனை குறித்து என்ன கவலை வேண்டி இருக்கிறது? மல்லிகார்ஜுனர் என்னை சேர்ந்து விட்டார். இந்த உடம்பை இனி நாயோ நரியோ கொத்தினால்தான் என்ன? அல்லது நீரில் அழுகினால்தான் என்ன?"

"மல்லிகார்ஜுனரை நம்பி நான் காட்டுக்குள் புகுந்தேன். அனைத்து செடி கொடிகளிடமும் என்னை காப்பாற்றுமாறு கேட்டேன். அவை எனக்கு போஷாக்கு அளித்து அவரது அடியார்களாயின. எனக்கு என்ன கவலை? நான் ஏன் பிச்சை எடுக்க வேண்டும்? கல்லை கட்டி கொண்டு கடலில் குதிப்பதால் கவலை தீருமா என்ன? மனம் அடங்காமல் உலக விஷயங்களை பற்றி எரிவதால், சிவனை எப்படி அடைய முடியும்? அவரது அடியார்களை நாடி அவர்களுடன் கூடி, பாடி, ஆடி, பேசி இருப்பது அவரது வரபலத்தால்தான் கிட்டும். உலகில் இது கிடைக்கும்வரை வேறு எதையும் கேட்க வேண்டாம். அதுவே தேவை. அடியாரை தொடாதே. அவரை தொட்டால் சிவனுக்கு பிடிக்காது. அடியவர் உடலில் வாழ்வது அவனே. இதை அறிந்து கொள்" என்றெல்லாம் சொன்னார்.

மன்னன் அமைதியாக கேட்டுக்கொண்டு வணங்கி விட்டு திரும்பினான். பசவருக்கு கல்யாண் நகரில் மஹாதேவியார் வரவு பற்றி கனவுகள் தோன்றலாயின.

(தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
**D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் (**D.D /M.O/Cash)** மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரு வருட சந்தா மட்டுமே பெற்று கொள்ளப்படுகிறது.
கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | ஏப்ரல் 11, 25 மே 11 |
| மார்ச் 30 | ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் ஆண்டு விழா |
| ஏப்ரல் 6 | தர்ம ரக்ஷண சமிதி விழா - நாரத கானசபா |
| ஏப்ரல் 12,13 | சிவகாசி அருகே தாயில்பட்டியில் சத்சங்கம் |
| ஏப்ரல் 14 | கன்யாகுமரி ஜயஹனுமான் சன்னிதி - லக்ஷதீபம் |
| ஏப்ரல் 19,20 | பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் பிரதிஷ்டா தினம் |
| மே 3,4 | குடியாத்தத்தில் GOD India Trust ஆண்டு விழா |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.